

லியோ டால்ஸ்டாய்

# இரண்டு கிழவர்கள்

ரேவதி கேசவமணி

ALIEN BOOKS

# இரண்டு கிழவர்கள்

(Two Old Men)

## லியோ டால்ஸ்டாய்

தமிழில்:

## ரேவதி கேசவமணி

ALIEN BOOKS

Erandu Kizhavarkal

Written by: Leo Tolstoy

English Translation by: Aylmer and Louise Maude

Translated In Tamil by: Revathi Kesavamani

Published by

A L I E N B O O K S

Revathi Kesavamani ©

First Edition: August 2019

This book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than in which it is published and without a similar condition including this the rights under copyright reserved above, no part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise), without prior written permission of both the copyright owner and the above mentioned publisher of this book.

# முன்னுரை

1885-ல் வெளியான டால்ஸ்டாயின் இந்தக் கதை ஒரு மனிதனின் உண்மையான ஆன்மீகத் தேடலை தெளிவுபடச் சித்தரிக்கிறது. நாம் பக்தி என்று கருதிக்கொண்டிருப்பது உண்மையில் பக்தி அல்ல என்பதை இந்தக் கதை புரிய வைக்கிறது.

பக்தி என்ற போர்வையில் நாம் ஆடும் கபட நாடகத்தை, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் தந்திரத்தை, இந்தக் கதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இந்தக் கதையை இரண்டு சொட்டு கண்ணீரேனும் சிந்தாமல் யாரும் வாசிக்க முடியாது. அத்தனை ஆழமாக இது நம் மனதின் அடியாழம் வரை சென்று நம் இதயத்தைச் சுக்கு நூறாகக் கிழிக்கிறது.

கடவுளாக வாழ்ந்தவர்களின் கல்லறை இது, சமாதி இது என்று சென்று பார்ப்பதை விடவும், காப்பாற்ற வழியின்றி பரிதவிக்கும் ஒருவருக்கு உதவுவது அதைவிடவும் ஆயிரம் மடங்கு உயர்ந்தது என்பதை மட்டுமல்ல அப்படிச் செய்வோருக்கே கடவுள் தன்னிடத்தில் இடம் தருகிறார் என்ற உண்மையை நெற்றிப் பொற்றில் அறைந்தாற்போல இந்தக் கதையில் சொல்லியிருக்கிறார் டால்ஸ்டாய்.

இந்தக் கதையில் எலிஷா பிறருக்கு உதவியதோடு மட்டுமின்றி அதை யாருக்கும் வெளிப்படுத்தாமல் மறைத்து விடுகிறார். அங்கேயே அவரின் மேலான குணம் வெளிப்படுகிறது. நல்லது செய்வது மட்டுமல்ல அதை யாருக்கும் தெரியாமல் செய்வது உன்னதமானது.

டால்ஸ்டாயின் கதைகளைத் தமிழாக்கி வரும் நான் இந்தக் கதையைப் பற்றிச் சாரு நிவேதிதா தனது இணையப் பக்கத்தில் குறிப்பிட்டிருந்ததன் வாயிலாகவே அறிந்துகொண்டேன். டால்ஸ்டாயின் ஆகச் சிறந்த கதைகளில் இதுவும் ஒன்று.

அன்புடன்,

ரேவதி கேசவமணி

# இரண்டு கிழவர்கள்

“அந்தப் பெண் அவரை நோக்கி, ஐயா, நீர் ஒரு தீர்க்கதரிசி என்பதை நான் உணர்கிறேன். எங்கள் முன்னோர்கள் இந்த மலையில் வழிபட்டார்கள்; ஜெருசலேம் மனிதர்கள் வணங்க வேண்டிய இடம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். இயேசு அவளை நோக்கி, பெண்ணே, என்னை நம்பு, இந்த மலையிலோ, ஜெருசலேமிலோ நீங்கள் பிதாவை வணங்காத நேரம் வரும்... உண்மையான பக்தர்கள் பிதாவையும் சத்தியத்தையும் வணங்கும் நேரம் வந்துவிட்டது, இப்பொழுது, அத்தகையவர்களிடம் பிதா தம்முடைய பக்தர்களைத் தேட முற்படுகிறார்”- ஜான் iV. 19-21, 23.

---

# 1

ஒருமுறை இரண்டு கிழவர்கள் கடவுளை வணங்க ஜெருசலேமுக்கு யாத்திரை செல்ல முடிவு செய்தனர். அவர்களில் ஒருவர் செழிப்பான விவசாயி எஃபிம் தாராஸ்டிச் ஷெவலெப் மற்றொருவர் அவ்வாறில்லாத எலிஷா பெட்ரோஃப்.

எஃபிம் தீவிரமான உறுதியான மனம் கொண்டவர். அவர் ஒருபோதும் குடித்ததில்லை மது அருந்தியதில்லை, புகை பிடித்ததும் இல்லை. தன்னுடைய வாழ்நாளில் அவர் ஒருபோதும் மோசமான வார்த்தைகளைச் சொன்னதில்லை. அவர் இரண்டு முறை கிராமத்து மூத்தவராகப் பணியாற்றினார். அவர் அலுவலகத்தை விட்டுச் செல்கையில் அவருடைய கணக்குகள் அனைத்தும் சரியாக இருந்தன. அவருடைய குடும்பம் பெரியது. அவருக்கு இரண்டு மகன்களும் மணமான இரண்டு பேரன்களும் இருந்தனர். அவர்கள் அனைவரும் அவரோடு வசித்தனர். நிமிர்ந்த நடையும் நீண்ட தாடியும் கொண்ட அவர் வலுவாக இருந்தார். இப்போது தனது அறுபது வயதை நெருங்கிய போதுதான் அவருடைய தாடியில் சாம்பல் நிறம் தெரியத்தொடங்கியது.

எலிஷா ஏழையும் இல்லை செல்வந்தரும் இல்லை. முன்னர் தச்சு வேலையில் ஈடுபட்டிருந்த அவர் இப்போது வயதாகிவிட்டதால் வீட்டில் தேனீக்களை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளார். அவருடைய ஒரு மகன் வேலை தேடிச் சென்றிருக்க, மற்றெருவன் அவரோடு வீட்டிலிருந்தான். எலிஷா கருணைமிக்க உற்சாகமான கிழவர். சில நேரங்களில் அவர் மூக்குப்பொடி போடுவார் என்பது உண்மைதான். பாடுவதில் விருப்பம் கொண்ட அவர் அவருடைய குடும்பத்தினரோடும் அண்டைவீட்டாரோடும் இணக்கமாக வாழ்ந்து வந்தார். கருமையான நிறமும் குட்டையான உருவமும், சுருண்ட தாடியும். வழுக்கைத் தலையும் அவரை ஒரு துறவியாகக் காட்டின.




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

அந்த இரண்டு கிழவர்களும் வெகு நாட்களுக்கு முன்னர் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து ஜெருசலத்திற்கு யாத்திரை செல்வதாக வேண்டிக் கொண்டனர். ஆனால் எஃபிமினால் அதற்கான நேரத்தை ஒதுக்க முடியவில்லை. அவருக்கு எப்போதும் செய்வதற்கு ஏதாவது வேலை இருந்துகொண்டே இருந்தது. ஒரு வேலை முடிந்ததும் அவர் மற்றொன்றைத் தொடங்கி விடுவார். முதலில் அவருக்குத் தனது பேரனின் திருமணத்தை முடிக்கவேண்டியிருந்தது. அதன்பிறகு தனது இளைய மகன் ராணுவத்திலிருந்து திரும்புவதற்காக் காத்திருந்தார். அதன் பிறகு அவர் தனது புதிய வீட்டைக் கட்ட ஆரம்பித்திருந்தார்.

ஒரு விடுமுறை நாளில் இரண்டு கிழவர்களும் வீட்டிற்கு வெளியே அமர்ந்து பேசிக்கொண்டனர்.

“நல்லது” என்ற எலிஷா, “நாம் நமது வேண்டுதலை எப்போது நிறைவேற்றப் போகிறோம்?” என்றார்.

எஃபிம் தனது முகத்தை இருக்கமாக வைத்துக்கொண்டார்.

“நாம் காத்திருப்போம்” என்றார் அவர். “இந்த வருடம் எனக்கு மிகவும் கடினமானதாக இருக்கிறது. புதிதாக கட்டத் தொடங்கியிருக்கும் இந்த வீட்டிற்கு நூறு ரூபிள்கள் தேவைப்படும் என நான் நினைத்தேன். ஆனால் இப்போதே அதற்கு முன்னூறு ரூபிள்கள் ஆகிவிட்டதோடு இன்னும் முடிந்தபாடில்லை. எனவே நாம் கோடைக்காலம் வரை காத்திருப்போம். கோடைக்காலத்தில் கடவுள் மனது வைத்தால் நாம் நிச்சயமாகச் செல்வோம்.”

“இப்படித் தள்ளிப்போடக் கூடாது என நினைக்கிறேன். உடனடியாகப் புறப்பட்டு விடவேண்டும்” என்றார் எலிஷா. “வசந்த காலம் பயணத்திற்கு ஏற்ற காலம்.”

“காலம் ஏற்றதாக இருக்கலாம் ஆனால் என்னுடைய வீடு என்னாவது? நான் இதை இப்படியே விட்டுச் செல்வது எப்படி?”

“அதைக் கவனிக்க யாரும் இல்லாததைப் போலப் பேசுகிறாய்! உன்னுடைய மகன் அதைப் பார்த்துக்கொள்கிறான்.”

“ஆனால் எப்படி? என் மூத்த மகனை நம்பமுடியாது, அவன் சில நேரங்களில் அளவுக்கதிகமாகக் குடிப்பான்.”

“ஓ, நண்பரே, நாம் இறந்துவிட்டாலும், நாமின்றி இந்த உலகம் இயங்கும். உனது மகன் இப்போதாவது சில அனுபவங்களைப் பெறட்டுமே.”

“அது உண்மைதான் ஆனால் தொடங்கிய வேலையை ஒருவன் முடிப்பதுதானே நல்லது.”

“அட, நண்பரே, நாம் செய்யவேண்டிய அனைத்தையும் ஒருபோதும் செய்து முடிக்க முடியாது. நளை மறுநாள் ஈஸ்டர் பண்டிகைக்காக வீட்டுப் பெண்கள் வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டியிருக்கிறது. இங்கே எப்போதும் செய்வதற்கு ஏதேனும் இருந்துகொண்டுதான் இருக்கும். அனைத்தையும் யாராலும் செய்து முடித்துவிட முடியாது. எனவே புத்திசாலியான எனது இளைய மருமகள், ‘விடுமுறை நமக்காகக் காத்திராமல் வருவதற்கு நாம் நன்றி சொல்லவேண்டும் இல்லையெனில் நாம் வேலை வேலை என்று அதற்குத் தயாராகாமலே இருந்து விடுவோம்’ என்பாள்.”

எஃபிம் யோசித்தார்.

“நான் இந்த வீட்டிற்கு அதிகமான பணத்தைச் செலவிட்டிருக்கிறேன். பணமில்லாமல் ஒருவன் பயணம் செய்ய முடியாது. நமக்கு நூறு ரூபிள்களாவது வேண்டும், அது குறைந்த பணமல்ல.”

எலிஷா சிரித்தார்.

“இப்போது வா, என்னுடைய கிழட்டு நண்பரே! என்னைவிட பத்து மடங்கு அதிகமான பணம் உன்னிடமுள்ளது. இருந்தும் நீ பணத்தைப் பற்றிப் பேசுகிறாய். நாம் எப்போது புறப்படலாம் என்று மட்டும் சொல். இப்போது என்னிடம் ஏதுமில்லை என்றாலும் இருப்பது எனக்குப் போதுமானது. ”

எஃபிம் சிரித்தார்.

“அன்பரே, நீ செல்வந்தனாக இருப்பாய் என்பதை நான் அறியவில்லை” என்ற அவர், “நீ அதை எங்கிருந்து பெற்றாய்?” என்றார்.

“நான் வீட்டிலிருந்து கொஞ்சம் புரட்ட முடியும். அது போதவில்லை எனில் நான் என்னுடைய பாதி தேனீக்களை என் அண்டை வீட்டுக்காரருக்கு விற்பேன். அவர் அவற்றை நீண்ட காலமாக வாங்க விரும்புகிறார்.”

“அவைகள் இந்த வருடத்தில் அதிகம் திரண்டால் பிறகு அதற்காக நீ பிறகு வருந்துவாய்.”

“வருந்துவதா! நானா? நண்பரே நான் வாழ்வில் எனது பாவங்களைத் தவிர வேறெதற்காகவும் வருத்தப்பட்டதில்லை. ஆன்மாவைத் தவிர வேறொன்று அதிகம் மதிப்புடையது இல்லை.”

“இருக்கலாம், ஆனால் வீட்டை அலட்சியப்படுவத்துவதும் சரியல்ல.”

“ஆனால் நமது ஆன்மாவை அலட்சியப்படுத்துவது சரியா? அது அதிக மோசமானது. நாம் வேண்டியிருக்கிறோம் எனவே புறப்படுவோம்! இப்போது உண்மையாகவே நாம் போவோம்!”

# 2

எலிஷா தனது தோழரை சம்மதிக்க வைப்பதில் வெற்றி பெற்றார். மறு நாள் காலையில், நன்றாக சிந்தித்துப் பார்த்த எஃபிம் எலிஷாவிடம் வந்தார்.

“நீ சொல்வது சரி, இப்போதே செல்வோம். வாழ்வும் மரணமும் இறைவன் கையில் உள்ளது. நாம் இப்போது உயிரோடு வலிமையுடன் இருக்கும் போதே புறப்படுவோம்.”

ஒரு வாரத்திற்குப் பிறகு இரண்டு கிழவர்களும் புறப்பட ஆயத்தமானார்கள். எஃபிமிடம் போதிய அளவு பணமிருந்தது. நூறு ரூபிள்கள் எடுத்துக்கொண்ட அவர் தனது மனைவிக்காக இருநூற்றை விட்டுச் சென்றார்.

எலிஷாவும் தயாரானார். தனது பத்து தேன் கூடுகளை, வரும் கோடையில் திரளும் தேன் அடைகளோடு பக்கத்து வீட்டுக்காரருக்கு விற்றார். அதற்காக எழுபது ரூபிள்கள் அவருக்குக் கிடைத்தன. மீதி நூறு ரூபிள்களை தனது குடும்பத்தாரிடமிருந்து திரட்டி அவர்களுக்கு ஏதுமின்றி காலியாக்கினார். அவருடைய மனைவி தனது ஈமச் சடங்கிற்காக சேர்த்து வைத்திருந்த அனைத்தையும் கொடுத்தார். அவருடைய மருகமகளும் தன்னிடமிருந்ததைக் கொடுத்தாள்.

எஃபிம் தனது மூத்த மகனுக்கு ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் திட்டவட்டமான கட்டளைகளை வழங்கினார். எப்போது எவ்வளவு புல் வெட்ட வேண்டும், எங்கே எருவை வண்டியில் ஏற்றுவது, வீட்டை முடித்து எப்படிக் கூரை அமைப்பது போன்ற எல்லாவற்றையும் யோசித்து, அதற்கேற்ப தனது கட்டளைகளை வழங்கினார். மறுபுறம், எலிஷா தனது மனைவியிடம் தான் விற்ற தேன்கூடுகளை திரளும் தேனடைகளோடு எந்தவொரு தந்திரமும் இன்றி, அண்டை வீட்டுக்காரருக்கு அனைத்தையும்

கொடுத்துவிட வேண்டும் என்று மட்டுமே சொன்னார். வீட்டு விவகாரங்களைப் பொறுத்தவரை அவர் எதையும் சுட்டிக்காட்டவில்லை.

“எப்போது என்ன தேவையோ அதைச் செய்யுங்கள்” என்று சொன்னார். “நீங்கள்தான் எஜமானர்கள் என்பதால் எது நல்லதோ அது உங்களுக்கு நன்றாகவே தெரியும்” என்றார்.

இப்படியாக கிழவர்கள் ஆயத்தமானார்கள். அவர்களுடைய குடும்பத்தார் அவர்களுக்காக கேக்குகளை தயாரித்தார்கள். அவர்களுக்காக பைகளை தயாரித்ததோடு, கால்களுக்கான லெனின் துணிகளை வெட்டி வைத்தனர். அவர்கள் புதிய தோல் காலணிகளை அணிந்துகொண்டதுடன், மாற்றுக் காலணிகளையும் எடுத்துக்கொண்டார்கள். அவர்களது குடும்பத்தார் அவர்களுடன் கிராமத்தின் எல்லை வரை சென்று அவர்களை வழியனுப்பி வைக்க, கிழவர்கள் தங்கள் யாத்திரையைத் தொடங்கினர்.

எலிஷா வீட்டைவிட்டு உற்சாகத்துடன் கிளம்பியதோடு, கிராமத்தைவிட்டு வெளியேறியதும் அனைத்தையும் மறந்துபோனார். அவருக்கிருந்த கவலையெல்லாம் தனது தோழரை எப்படி மகிழ்விப்பது, யாரிடமும் கடுமையான வார்த்தைகளைச் சொல்லாதிருப்பது எப்படி, தனது இலக்கையும் திரும்ப வீட்டையும் எப்படி அமைதியாகவும் அன்போடும் அடைவது என்பதிலேயே இருந்தன. சாலையில் நடக்கும்போது சில பிரார்த்தனைகளை முனுமுனுத்தவாறும், தான் அறிந்த சில துறவிகளின் வாழ்வை திரும்ப நினைத்துப் பார்த்தபடியும் அவர் சென்றார். சாலையில் யாரையேனும் பார்க்க நேர்கையிலும், இரவில் எங்கேயேனும் ஒதுங்கும்போதும், எத்தனைக்கு எத்தனை முடியுமோ அத்தனை மரியாதையோடு இனிய வார்த்தைகளைப் பேசினார். எனவே அவர் தனது பயணத்தை உற்சாகமாக அனுபவித்தார். ஆனால் அவர் தனது பொடி டப்பியை வீட்டில் விட்டுவிட்டு வந்துபோதும் அவரால் அதன் மீதான விருப்பத்தை மட்டும் விட்டுவிட முடியவில்லை. வழியில் சந்தித்த ஒரு மனிதன் அவருக்கு பொடி டப்பியைக் கொடுத்தான். இப்படியாக அவர் அவ்வப்போது நின்று நின்று பொடி போட்டவாறு தனது நண்பரைப் பிந்திச் சென்றார்.

எஃபிம் நன்றாக திடமாக நடந்தார். அவர் கடுமையான வார்த்தைகளைப் பேசவில்லை என்றாலும் அவருடைய இதயம் லேசாக இல்லை. வீட்டைப் பற்றிய சிந்தனை அவர் மனதைக் கனக்க வைத்தது. வீட்டில் என்ன நடக்கும் என்பதைக் குறித்து அவர் மிகுந்த கவலையடைந்தார். தனது மகனிடம் எதையாவது செய்யச் சொல்ல மறந்துவிட்டோமா? அவன் அனைத்தையும் சரியாகச் செய்வானா? அவன் தான் சொன்னபடியே அனைத்தையும் செய்வானா என்று அவர் வியந்தார். தான் மீண்டும் திரும்பச் சென்று அனைத்தையும் எவ்வாறு செய்யவேண்டும் என்பதை அவனுக்குக் காட்டவேண்டும் என்ற உந்துதல் அவருக்குள் எழுந்தது.

# 3

இரண்டு கிழவர்களும் ஐந்து வாரங்களாக நடந்தனர். வீட்டில் தயாரித்த அவர்களின் காலணிகள் கிழிந்துபோயின. எனவே சிறிய ருஷ்யாவை அடைந்த அவர்கள் புதிதாக ஒன்றை வாங்கினர். அவர்கள் வீட்டைவிட்டு வெளியேறிய பிறகு தங்களின் உணவுக்காவும் இருப்பிடத்திற்காகவும் செலவுசெய்ய வேண்டியிருந்தது. ஆனால் சிறிய ருஷ்யாவை அடைந்த பிறகு அங்கிருந்த மக்கள் அவர்களை தங்கள் வீடுகளில் தங்கும்படி கேட்டுக்கொண்டதோடு பணம் ஏதும் வாங்காமல் தங்குவதற்கான இடமும் உணவும் கொடுத்தனர். அத்தோடு நில்லாமல் வழியில் சாப்பிடுவதற்காக அவர்களின் பைகளில் தேவையான அளவு ரொட்டியும் கேக்குகளும் கொடுத்தனுப்பினர்.

இவ்வாறு அந்தக் கிழவர்கள் செலவு ஏதுமின்றி ஐநூறு மைல் தூரத்திற்குப் பிரயாணம் செய்தனர். ஆனால் அவர்கள் அந்த எல்லையைக் கடந்து விளைச்சல் பொய்த்துப்போன ஒரு மாவட்டத்திற்கு வந்தனர். அங்கேயும் விவசாயிகள் அவர்கள் இரவில் தங்குவதற்கு இலவசமாக இருப்பிடம் கொடுத்தார்கள் என்றாலும் அவர்களின் உணவுக்கு அவர்களால் ஏதும் செய்ய முடியவில்லை. பல நேரங்களில் அவர்கள் பணம் கொடுக்கத் தயாராக இருந்தபோதும், விவசாயிகளிடம் ஒன்றுமில்லாததால் அவர்களுக்கு உதவ முடியவில்லை. ஒரு வருடத்திற்கு முன்னர் விளைச்சல் முற்றாக பொய்த்துவிட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். செல்வந்தர்களாக இருந்தவர்கள் பலரும் அனைத்தையும் விற்று ஓட்டாண்டி ஆகிவிட்டார்கள். நடுத்தர வசதி உள்ளவர்கள் நிர்க்கதியாக அங்கிருந்து சென்றுவிட, ஏழைகளோ எங்கும் செல்ல முடியாமல் பட்டினியால் பரிதவித்து கட்டாயமாகப் பிச்சையெடுக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. பனிக்காலத்தில் அவர்கள் அனைவரும் உமியையும் கிழங்குகளையும் சாப்பிட்டனர்.

ஒரு இரவு கிழவர்கள் ஒரு சிறிய கிராமத்தில் தங்கினர். அவர்கள் பதினைந்து பவுண்டு ரொட்டிகளை வாங்கியிருந்தனர். அங்கே தூங்கிய அவர்கள், பகலின் சூட்டை தவிர்க்கும் பொருட்டு சூரியோதயத்திற்கு முன்பே புறப்பட்டார்கள். அவர்கள் எட்டு மைல் தூரம் சென்றதும், ஒரு ஓடைக்கு அருகில் அமர்ந்து, குடுவையில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு சில ரொட்டித் துண்டுகளைச் சாப்பிட்டார்கள். அதன் பிறகு தங்கள் கால் துணியை மாற்றிக்கொண்ட அவர்கள் சற்றே ஓய்வெடுத்தார்கள். எலிஷா தனது பொடி டப்பியை எடுத்தார். எஃபிம் அவரைப் பார்த்துத் தலையை அசைத்தார்.

“நீ ஏன் இன்னும் அந்த கெட்ட பழக்கத்தை விடாதிருக்கிறாய்” என்றார் அவர்.

எலிஷா தனது கையை ஆட்டினார். “இந்தத் தீய பழக்கம் என்னைவிட ஆற்றல் மிக்கதாக இருக்கிறது” என்றார் அவர்.

அதன் பிறகு எழுந்திருந்து ஏறக்குறைய மீண்டும் எட்டு மைல் தூரம் நடந்ததும் ஒரு பெரிய கிராமத்தைக் கடந்து சென்றனர். அப்போது மிகவும் வெப்பமாக இருந்தது. மிகவும் களைத்துப் போன எலிஷா சற்றே ஓய்வெடுக்க விரும்பினார் ஆனால் எஃபிம் நிற்கவில்லை. இருவரில் எஃபிம் நன்றாக நடக்கக்கூடியவர் என்பதால் எலிஷாவுக்கு அவரைத் தொடர்ந்து செல்வது சிரமமாக இருந்தது.

“இப்போது மட்டும் சற்றே ஏதாவது குடிக்க முடிந்தால்” என்றார் அவர்.

“நல்லது, குடி” என்றார் எஃபிம். “எனக்கு எதுவும் வேண்டியதில்லை.”

எலிஷா நின்றார்.

“நீ தொடர்ந்து போ” என்ற அவர் ”ஆனால் நான் இங்கேயிருக்கும் அந்த சிறு குடிசைக்குப் போகிறேன். பிறகு சற்று நேரத்தில் நான் உன்னைப் பிடிப்பேன்” என்றார்.

“அப்படியே” என்ற எஃபிம், எலிஷா குடிசைக்கு திரும்பியபோது, தனியாகச் சாலையில் நடந்தார்.

அது களிமண்ணால் கட்டப்பட்ட சிறிய குடிசை. அதன் அடிப்பகுதி அடர்ந்த நிறமும் மேற்புறம் வெண்மையாகவும் இருந்தது. குடிசையின் பல இடங்களில் விரிசல் ஏற்பட்டிருந்தது. அது வெகு காலமாக மீண்டும் பூசப்படவில்லை என்பதோடு அதன் கூரை ஒரு பக்கமாக சாய்ந்திருந்தது. அதன் நுழைவாயில் முற்றத்தை ஒட்டியிருந்தது. முற்றத்தில் நுழைந்த எலிஷா குடிசையை ஒட்டிய நடைபாதையில் ஒரு மனிதர் படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். தாடி இல்லாத அவர், சிறிய ருஷ்யாவில் உள்ள வழக்கத்தின்படி தனது சட்டையை கால்சராயில் நுழைத்திருந்தார். அவர் குடிசையின் நிழலில் ஒதுங்கியிருக்க வேண்டும் ஆனால் சூரியன் சுற்றி வந்து இப்போது அவர் மீது முழுமையாகத் தனது கதிர்களை வீசிக்கொண்டிருந்தான். அவர் உறங்காமல் வெறுமனே படுத்திருந்தார். அவரை அழைத்த எலிஷா குடிப்பதற்கு ஏதேனும் இருக்குமா என்று கேட்டார் அனால் அவர் பதிலளிக்கவில்லை.

“அவருக்கு ஏதேனும் உடல் நலமில்லாதிருக்கலாம் அல்லது அவர் நட்பானவராக இல்லாதிருக்கலாம்” என நினைத்த எலிஷா கதவை நெருங்கியபோது, குடிசையின் உள்ளே குழந்தை ஒன்று அழும் குரலைக் கேட்டார். அவர் கதவின் கைப்பிடியிலிருந்த வளையத்தை தட்டி ஒலி எழுப்பினார்.

“ஹே, வீட்டுக்காரரே!” என்று கூப்பிட்டார் அவர். பதில் ஏதுமில்லை. அவர் மீண்டும் தட்டினார்.

“ஹே, கிருஸ்துவரே!” எந்தச் சத்தமும் இல்லை.

“ஹே, கடவுளின் பணியாளரே!” இப்போதும் பதில் இல்லை.

எலிஷா அங்கிருந்து திரும்ப எத்தனிக்கையில், கதவுக்கு அந்தப் புறமிருந்து ஏதோ முனகல் ஒலி கேட்பதாக நினைத்தார்.

“அன்பரே, இங்கேயிருப்பவருக்கு ஏதேனும் துரதிருஷ்டம் நிகழ்ந்திருக்க வேண்டும். நான் அதை என்னவென்று பார்ப்பது நல்லது” என்ற எலிஷா குடிசைக்குள் நுழைந்தார்.

# 4

எலிஷா கைப்பிடியைத் திருகினார், கதவு தாழிடப்படாமலிருந்தது. அதைத் திறந்த அவர் அங்கிருந்த குறுகலான பாதையில் நடந்தார்.

வசிப்பறையின் கதவு திறந்திருந்தது. அதன் இடது புறம் செங்கல் அடுப்பு இருந்தது. அதற்கு எதிர்புறச் சுவரில் கிருஸ்துவின் படமும் அதன் முன்புறம் ஒரு மேசையும் இருந்தது. மேசையின் அருகிலிருந்த பலகையின் மீது ஒரு வயதான பெண்மணி அமர்ந்திருந்தார். அவர் வெற்றுத் தலையுடன் ஒற்றை ஆடை மட்டும் உடுத்தியிருந்தார். அவர் தனது தலையை மேசையின் மீது வைத்திருக்க, அவருக்கு அருகில் மெலிந்த வெண்ணிறமுள்ள, வயிறு பெருத்த ஒரு சிறுவன் இருந்தான்.

அவன் அவளுடைய கையைப் பிடித்து இழுத்து பரிதாபமாக அழுதபடி எதையோ கேட்டுக் கொண்டிருந்தான். எலிஷா உள்ளே நுழைந்தார். அந்தக் குடிசையிலிருந்த காற்று மாசடைந்திருந்தது. சுற்றும் முற்றும் பார்த்த அவர் ஒரு பெண் அடுப்புக்கு அப்பால் தரையில் படுத்திருப்பதைக் கண்டார். அவள் தரையில் மல்லாந்து படுத்திருக்க அவளுடைய தொண்டை வேகமாக துடித்தபடியிருந்தது. அவள் தனது ஒரு காலை இழுத்து மறுபக்கமாக இழுத்து விட்டாள். அவளிடமிருந்து துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. உண்மையாக அவளால் எதையும் செய்ய முடியவில்லை என்பதோடு அவளைக் கவனிப்பாரும் யாருமில்லை. வயதான பெண்மணி தலையை உயர்த்தி வேற்று மனிதரைப் பார்த்தாள்.

“உங்களுக்கு என்ன வேண்டும்?” என்றாள் அவள். “உங்களுக்கு என்னதான் வேண்டும்? எங்களிடம் ஒன்றுமில்லை.”

அவள் சிறி ருஷ்யாவின் பேச்சு வழக்கில் பேசியபோதும் எலிஷா அதைப் புரிந்துகொண்டார்.

“நான் சிறிது தண்ணீர் குடிக்க வந்தேன்” என்றார் அவர்.

“இங்கே யாருமில்லை. யாருமே இல்லை. எங்களிடம் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. உங்கள் வழியே போங்கள்.”

எலிஷா கேட்டார். ”அந்தப் பெண்ணை கவனிக்க உங்களில் யாருமில்லையா?”

“இல்லை, யாருமில்லை. எனது மகன் வெளியே இறந்து கொண்டிருக்கிறான். நாங்கள் இங்கே செத்துக்கொண்டிருக்கிறோம்.”

வேற்று மனிதரைக் கண்டதும் கத்துவதை நிறுத்திய அந்தச் சிறுவன், அந்தக் கிழவி பேசத்தொடங்கியதும், அவளை கையைப் பிடித்து இழுத்தபடி மீண்டும் கத்தினான்.

“ரொட்டி, பாட்டி, ரொட்டி.”

எலிஷா அந்தக் கிழவியை விசாரிக்க முற்றபட்டபோது அந்த மனிதன் குடிசைக்குள் தடுமாறியபடி நுழைந்தான். சுவற்றை ஒட்டியவாறு நடைபாதையில் நடந்த அவன், வசிப்பறையை அடைந்ததும் நடக்க முடியாமல் அறையின் மூலையில் சுருண்டு விழுந்தான். அவன் எழுந்து மேசையை நெருங்கி வர முயற்சிக்காமல் விழுந்தபடியே உடைந்த குரலில் பேசினான். ஒரு வார்த்தை பேசியதும் பேசுவதை நிறுத்தி மூச்சை இழுத்துப் பிடித்து மூச்சு வாங்கினான்.

“நோய் எங்களை ஆக்ரமித்துக் கொண்டது…” என்றான் அவன். “பஞ்சம்… பசியால் அவன் சாகிறான்” என்ற அவன் அந்தப் பையனைச் சுட்டிக்காட்டி அழத்தொடங்கினான்.

எலிஷா தனது தோளிலிருந்த பையை எடுத்துக் கீழே வைத்தார். பின்னர் அதை மேசையின் மீது வைத்த அவர் அதன் கட்டுக்களைப் பிரித்தார். பையைப் பிரித்த அவர் அதிலிருந்து ரொட்டியை எடுத்துத் தனது கத்தியால் துண்டுகளாக வெட்டி அந்த மனிதனிடம் கொடுத்தார். ஆனால் அந்த மனிதன் அதை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவன் அந்தப் பையனையும், அடுப்புக்கு அப்பாலிருந்த சிறுமியையும் சுட்டிக்காட்டி சொன்னான்:

“அவர்களுக்குக் கொடு.”

எலிஷா அந்தப் பையனிடம் ரொட்டித் துண்டை நீட்டினார். ரொட்டியின் வாசனையை நுகர்ந்த அந்தப் பையன் தனது கையை நீட்டி தன்னுடைய இரண்டு கையினால் அந்த ரொட்டித் துண்டைப் பிடுங்கி தனது மூக்கு ரொட்டியில் அழுந்தும்படியாக கடித்துச் சாப்பிட்டான். அடுப்பின் பின்புறமிருந்து முன்னால் வந்த சிறுமி தனது பார்வையை ரொட்டியின் மீது நிலைக்க விட்டாள். எலிஷா அவளுக்கு ஒரு துண்டை கொடுத்தார். பிறகு அவர் மேலும் ஒரு துண்டை வெட்டிக் கிழவிக்குக் கொடுத்தார்.

“சிறிதளவு தண்ணீர் மட்டும் எடுக்க முடிந்தால்” என்ற அவள், “அவர்களின் வாய்கள் உலர்ந்து போயிருக்கின்றன. நான் நேற்று தண்ணீர் எடுக்க முயற்சித்தேன் அல்லது அது இன்றாக இருக்கலாம். எனக்குச் சரியாக நினைவு இல்லை. ஆனால் நான் வழியில் விழுந்துவிட்டேன். என்னால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. வாளி இன்னும் அங்கேயே கிடக்கும் யாரவது அதை எடுத்துச் செல்லவில்லை எனில்” என்றாள்.

எலிஷா கிணறு எங்கே இருக்கிறது என்று கேட்டார். அந்தக் கிழவி சொன்னாள். வெளியே சென்ற அவர் வாளியைக் கண்டுபிடித்து எடுத்து, தண்ணீர் கொண்டுவந்து அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தார். சிறுவர்களும் கிழவியும் தண்ணீரோடு மேலும் சில ரொட்டித் துண்டுகளைச் சாப்பிட்டனர். ஆனால் அந்த மனிதன் சாப்பிடவில்லை.

“நான் சாப்பிடவில்லை” என்றான் அவன்.

இந்த நேரத்தில் இளைய பெண்ணிடம் எந்த சலனமும் இல்லை என்றாலும் அவள் அப்படியும் இப்படியுமாக புரண்டுகொண்டிருந்தாள். எலிஷா அருகிலிருந்த கடைக்குச் சென்று தினை, உப்பு, மாவு, எண்ணெய் ஆகியவற்றை வாங்கினார். அவர் ஒரு கோடரியைக் கண்டுபிடித்து, சிறிது விறகுகளை வெட்டி அடுப்பைப் பற்ற வைத்தார். அந்த சிறுமி அவருக்கு உதவி செய்தாள். அவர் சிறிது சூப் தயாரித்து பட்டினியால் வாடும் அவர்களுக்குக் கொடுத்தார்.

# 5

அந்த மனிதன் சிறிதே சாப்பிட, கிழவியும் கொஞ்சமாக சாப்பிட்டாள். அந்தச் சிறுவனும் சிறுமியும் தங்கள் தட்டை நக்கிச் சுத்தமாகச் சாப்பிட்டார்கள். பிறகு அவர்கள் ஒருவரை ஒருவர் அணைத்தபடி அப்படியே உறங்கிப்போனார்கள்.

அதன் பிறகு கிழவியும் அந்த மனிதனும் எலிஷாவிடம் தாங்கள் இந்நிலைக்கு ஆளான அவலத்தைச் சொன்னார்கள்.

“நாங்கள் இதற்கு முன்னர் ஏழையாக இருந்தோமா?” என்ற அவர்கள், “ஆனால் விளைச்சல் பொய்த்த பிறகு நாங்கள் சேமித்து வைத்தவை இலையுதிர்காலம் வரையிலும் போதுமானதாக இருந்தது. ஆனால் குளிர் காலம் வந்தபோது எங்களிடம் எதுவும் எஞ்சியிருக்கவில்லை. எனவே பக்கத்து வீட்டாரிடமிருந்தும் முடிந்தவர்களிடமிருந்தும் நாங்கள் பிச்சை எடுக்கும் நிலை ஏற்பட்டது. முதலில் அவர்கள் கொடுத்தார்கள் ஆனால் பிறகு மறுத்தார்கள். சிலர் எங்களுக்கு உதவ முன்வந்தார்கள் என்றாலும் அவர்களிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லை. எல்லா இடங்களிலும் பணம், மாவு. ரொட்டி இவற்றைக் கடன் வாங்கியிருந்ததால் நாங்கள் மேலும் கேட்பதற்கு வெட்கப்பட்டோம்.”

“நான் வேலைக்காக முயற்சித்தேன்” என்ற அந்த மனிதன், “ஆனால் கிடைக்கவில்லை. எல்லா இடங்களிலும் தங்கள் சொந்த வேலையைச் செய்வதற்கே ஆட்களை நாடினார்கள். ஒரு நாள் ஒரு சிறு வேலை கிடைக்கும் பிறகு இரண்டு நாட்கள் வேலையைத் தேட வேண்டும். எனவே கிழவியும் சிறுமியும் பிச்சை எடுக்கச் சென்றார்கள். ஆனால் அவர்களுக்குச் சொற்பமாகவே கிடைத்தது. ரொட்டி கிடைப்பது அரிதாக இருந்தது. இருந்தும் நாங்கள் அனைவரும் சேர்ந்து எப்படியோ கொஞ்சம் சேமித்தோம். அடுத்த விளைச்சல் வரை சமாளித்து விடலாம் என

நம்பிக்கையோடு இருந்தோம். ஆனால் வசந்தகாலம் வந்ததும் மக்கள் எதையும் கொடுக்க மறுத்துவிட்டார்கள். பிறகு எங்களை இந்த நோய் வந்து பிடித்தது. நிலைமை மேலும் மேலும் மோசமாயிற்று. ஒரு நாள் சாப்பிடுவதற்கு ஏதேனும் கிடைக்கும் பிறகு இரண்டு நாட்களுக்கு ஒன்றுமே கிடைக்காது. நாங்கள் புல்லைச் சாப்பிட ஆரம்பித்தோம். அது புல்லா அல்லது வேறு ஏதேனும் ஒன்றா என்று தெரியவில்லை, என் மனைவி நோயில் விழுந்தாள். அவளால் நடக்க முடியவில்லை. என்னிடம் எந்த சக்தியும் எஞ்சியிருக்கவில்லை. எங்களைக் காப்பாற்ற எந்த சக்தியும் இல்லை."

"நான் சில காலம் தனியாகப் போராடினேன்" என்ற கிழவி, "ஆனால் உணவில்லாமை என்னையும் முடக்கியது. சிறுமியும் இளைத்து வெளுத்துப்போனாள். நான் அவளை அண்டை வீட்டாரிடம் போகச் சொன்னேன். ஆனால் அவள் குடிசையை விட்டு நகர மறுத்து மூலையில் முடங்கிவிட்டாள். நேற்றைக்கு முன் தினம் பக்கத்து வீட்டுக்காரர் வந்து பார்த்தார். ஆனால் நாங்கள் நோயுற்றிருப்பதை அறிந்து திரும்பி விட்டார். சாப்பிடுவதற்கு வழியின்றி நாங்கள் மரணத்திற்காகக் காத்திருக்கிறோம்" என்றாள்.

அவர்களின் கதையைக் கேட்ட எலிஷா தனது தோழரை முந்திச்செல்லும் முடிவைக் கைவிட்டுவிட்டு அன்று இரவு அவர்களுடனே தங்கினார். காலையில் அவர் வீட்டு வேலைகளைச் செய்யத் தொடங்கினார், அது தன்னுடைய சொந்த வீட்டைப் போல. கிழவியின் உதவியோடு மாவைப் பிசைந்த அவர் அடுப்பைப் பற்ற வைத்தார். பிறகு அவர் சிறுமியோடு பக்கத்து வீட்டிற்குச் சென்று அத்தியாவசியமான பொருட்களை வாங்கினார். அந்த வீட்டிலிருந்த சமையல் பாத்திரங்கள், துணிகள் அனைத்தையும் அவர்கள் ரொட்டிக்காக விற்றிருந்தார்கள். எனவே எலிஷா என்னென்ன தேவையோ அனைத்திற்கும் ஏற்பாடு செய்தார். சிலவற்றை தயாரித்த அவர் சிலவற்றை வெளியே வாங்கினார். ஒரு நாள் அவர்களோடு இருந்த அவர் பிறகு மற்றொரு நாளும் அதன் பிறகு மூன்றாவது நாளும் அங்கேயே இருந்தார். சிறுவன் தனது ஆற்றலைத் திரும்பப் பெற்றான். பிரகாசமடைந்த சிறுமி, அவர் அழைத்தபோதெல்லாம்

ஓடிச் சென்று அவருக்கு அனைத்து வேலைகளிலும் உதவினாள்.

“அப்பா, அப்பா.”

கிழவியும் வலுப்பெற்று வெளியே சென்று அண்டை வீட்டாரைப் பார்க்கச் சென்றாள். அந்த மனிதனும் முன்னேற்றமடைந்து, சுவரைப் பிடித்தபடி எழுந்து நின்றான். அவனுடைய மனைவி மட்டும் எழுந்திருக்க முடியாமல் இருந்தாள் என்றாலும் மூன்றாவது நாள் சுயநினைவடைந்து உணவு கேட்டாள்.

“நல்லது” என்ற எலிஷா, “நான் வழியில் இவ்வளவு நேரத்தை வீணடிப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை. இனிமேல் தொடர்ந்து பயணிக்க வேண்டும்” என நினைத்தார்.

# 6

நான்காவது நாள் கோடை நோன்புக்குப் பிறகான விருந்து நாள் எலிஷா நினைத்தார்:

“நான் இவர்களோடு இருந்து நோன்பை முடிக்க வேண்டும். நான் சென்று நோன்பிற்காக சிலவற்றை வாங்கி வரவேண்டும். நாளை மாலை நான் பயணத்தைத் தொடங்கவேண்டும்.”

எனவே எலிஷா கிராமத்திற்குச் சென்று பால், கோதுமை முதலியவற்றை வாங்கிவந்து, அவற்றைச் சமைக்க கிழவிக்கு உதவினார். நோன்பு நாளன்று எலிஷா தேவாலயத்திற்குச் சென்று திரும்பிய பின்னர் அவர்களோடு சேர்ந்து நோன்பை முடித்தார். அன்று மனைவி எழுந்து நின்றதோடு அங்கேயும் இங்கேயும் சிறிது நடக்கவும் செய்தாள். கணவன் முகத்தை மழித்து கிழவி துவைத்துக்கொடுத்த சுத்தமான சட்டையை அணிந்து உழவுக்கான கருவியை அடமானம் வைத்திருந்த பணக்கார விவசாயிடம் சென்று கெஞ்சினார். மேலும் தான் அவரிடம் வைத்திருந்த நிலத்தை அறுவடை வரை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கும்படி கெஞ்சினார். ஆனால் அன்று மாலை கவலையோடு திரும்பிய அவர் அழத்தொடங்கினார். அந்த பணக்கார விவசாயி கருணை காட்டவில்லை ஆனால், “பணத்தைக் கொண்டு வா” என்றார்.

எலிஷா மீண்டும் யோசித்தார். “இப்போது இவர்கள் எப்படி வாழ்வார்கள்?” என தனக்குள் கேட்டுக்கொண்டார். “இவர்களுடைய வயல்வெளி அடமனாத்தில் உள்ளதால் இவர்களால் அறுவடை செய்ய முடியாது. இந்த வருடம் பூமித் தாய் அபரிமிதமான விளைச்சளைக் கொடுத்திருக்கிறாள். ஆனால் இவர்கள் அதை எடுத்துச் செல்ல முடியாது. இவர்களின் மூன்று ஏக்கர் நிலம் அந்த பணக்கார விவசாயிடம் அடமானத்தில் உள்ளது. நான் சென்றுவிட்டால் இவர்கள் முன்பு என்ன நிலையில் இருந்தார்களோ அதே




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.”

எலிஷா இரண்டுங்கெட்டானாகத் தவித்தார். ஆனால் அவர் அன்று மாலை அங்கிருந்து செல்வதில்லை என்றும் காலை வரை காத்திருப்பது என்றும் முடிவு செய்தார். அவர் நடைபாதையில் உறங்கச் சென்றார். அவர் தனது பிரார்த்தனையை முடித்துவிட்டுப் படுத்தார். ஆனால் அவருக்கு உறக்கம் வரவில்லை. அதிகளவில் பணத்தையும் நேரத்தையும் செலவழித்து விட்டதால் ஒருபுறம் அவர் அங்கிருந்து போகவேண்டும் என நினைத்தார். ஆனால் மறுபுறம் அவர் அந்த மனிதர்களுக்காக வருந்தினார்.

“இதற்கு முடிவே இல்லை என்று தெரிகிறது” என்றார் அவர். “நான் முதலில் அவர்களுக்கு சிறிதளவு தண்ணீரையும் ரொட்டித் துண்டையும் கொடுக்கலாம் என்றுதான் நினைத்தேன். ஆனால் அது என்னை இப்போது இந்த நிலைமையில் தள்ளிவிட்டது. அவர்களின் நிலத்தை மீட்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. அதைச் செய்து முடித்த பிறகு நான் அவர்களுக்காக பசுவை வாங்கவேண்டும். அந்த மனிதனுக்கு ஒரு குதிரை வாங்கவேண்டும். ஒரு அருமையான வட்டத்தில் சிக்கிக்கொண்டாயே எலிஷா! உன்னுடைய கணக்குத் தப்பாகப் போய்விட்டதே!”

எலிஷா எழுந்தார். தலையணையாக வைத்திருந்த மேலங்கியை எடுத்து பிரித்துத் தன்னுடைய பொடி டப்பியை எடுத்து ஒரு இழுப்பு இழுத்தார். அது தான் தெளிவாக யோசனை செய்ய உதவும் என அவர் நினைத்தார்.

ஆனால் அப்படி நடக்கவில்லை! அவர் யோசித்தார் யோசித்தார் யோசித்துக்கொண்டே இருந்தார். எவ்வளவு யோசித்தும் அவரால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. அவர் போக நினைத்தபோதெல்லாம் இரக்கம் அவரை இழுத்துப் பிடித்தது. அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவர் தனது மேலங்கியை மடித்து மீண்டும் தலைக்கடியில் வைத்தார். அதிகாலைச் சேவல் கூவும் வரை அப்படியே வெகு நேரம் படுத்திருந்த அவர் அதன் பிறகு கண்ணயர்ந்தார்.

“ரொட்டி, அப்பா, ரொட்டி!”

ஒரு சிறிய பையன் அவர் கால் துணியைப் பிடித்து இழுப்பதையும்,

குடிசையின் சொந்தக்காரனும் கிழவியும் அவரை ஜன்னல் வழியாகப் பார்ப்பதையும் கண்டார்.

எழுந்திருந்த எலிஷா சத்தமின்றி தனக்குள் சொல்லிக் கொண்டார்:

“நாளை நான் இவர்களின் நிலத்தை மீட்பேன். இவர்களுக்கு ஒரு குதிரையையும், அடுத்த அறுவடை வரைக்குமான மாவையும் வாங்குவேன். சிறுமிக்காக ஒரு பசுவை வாங்கவேண்டும். இல்லையேல் கடலுக்கு அப்பாலுள்ள இறைவனைத் தேடச் செல்லும்போது நான் அவரை இழக்க நேரிடும்.”

அதன் பிறகு தூங்கிய எலிஷா அடுத்த நாள் காலை வரை தூங்கினார். நேரமாக எழுந்திருந்த அவர் பணக்கார விவசாயிடம் சென்று நிலத்தை மீட்டார். அவர் ஒரு அரிவாளையும் வாங்கிக்கொண்டு அந்த மனிதனிடம் கொண்டுவந்து கொடுத்தார். அவனை வயலுக்கு அனுப்பிவிட்டு அவர் கிராமத்திற்குச் சென்றார். ஒரு குதிரையும் வண்டியும் விற்பனைக்கு வந்திருப்பதாக அவர் கேள்விப்பட்டிருந்தார். அதன் சொந்தக்காரரிடம் பேரம் பேசிய அவர் அவற்றை வாங்கினார். அதன் பிறகு அவர் ஒரு பை நிறைய மாவை வாங்கி வண்டியில் வைத்துவிட்டுப் பசுவை வாங்கச் சென்றார். அப்போது அவர் வழியில் இரண்டு பெண்கள் பேசிக்கொண்டு போவதைக் கவனிக்காமல் சென்றார். அவர்கள் சிறிய ருஷ்யாவின் பாஷையில் பேசியபோதும் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அவர் புரிந்துகொண்டார்.

“முதலில் அவர்கள் அவரை அறிந்திருக்கவில்லை. அவர் ஒரு சாதாரண மனிதர் என்றுதான் அவர்கள் நினைத்தார்கள். அவர் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்கவே வந்தார் ஆனால் இங்கேயே தங்கி விட்டார். அவர் அவர்களுக்காக வாங்கிய பொருட்களைச் சற்று நினைத்துப் பாருங்கள்! இன்று காலை அவர் அவர்களுக்காக ஒரு குதிரையும் வண்டியும் வாங்கினார் என்று சொல்கிறார்கள்! உலகில் இதுபோன்ற மனிதர்கள் அதிகம் இல்லை. அவரைப் பார்ப்பது மதிப்புக்குரியது.”

அதைக் கேட்ட எலிஷா அவர்கள் தன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டார். அவர் பசுவை வாங்கப்

போகாமல் திரும்பிய அவர் குதிரைக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு அதை ஓட்டிக்கொண்டு குடிசைக்கு வந்தார். குடிசையில் இருந்தவர்கள் குதிரையைக் கண்டு மிகவும் வியப்படைந்தார்கள். அவர்கள் அது தங்களுக்காக இருக்கும் என்று நினைத்தாலும் அதைக் கேட்கத் துணியவில்லை. அந்த மனிதன் வாசல் கதவைத் திறந்துவிட்டான்.

"தாத்தா, எங்கிருந்து குதிரையைப் பெற்றீர்கள்?" என்று கேட்டான் அவன்.

"ஏன், நான் வாங்கினேன்" என்றார் எலிஷா. "இது மலிவாக இருந்தது. அது இரவில் சாப்பிடுவதற்காகச் சிறிது புல்லை வெட்டிக் கொண்டு வா."

குதிரையை அவிழ்த்தவிட்ட அவன் ஒரு சாக்கை எடுத்துக்கொண்டு வயலுக்குப் போனான். அவன் சிறிதளவு புல்லை வெட்டி வந்து களையத்தில் வைத்தான். அனைவரும் படுத்தார்கள். எலிஷா வெளியில் சென்று நடைபாதையில் படுத்தார். அன்று அவர் தனது பையையும் உடன் எடுத்து வந்திருந்தார். அவர்கள் அனைவரும் உறங்கியதும் அவர் எழுந்திருந்து தனது பையை எடுத்துக்கொண்டு, கால்களில் துணியைக் கட்டி, காலணியும் மேல் கோட்டும் அணிந்துகொண்டு எஃபிமைத் தொடரச் சென்றார்.

# 7

எலிஷா மூன்று மைல் தொலைவு நடந்ததும் வெளிச்சம் வரத் தொடங்கியது. ஒரு மரத்தடியில் அமர்ந்த அவர் தனது பையைத் திறந்து தனது பணத்தை எண்ணினார். பதினேழு ரூபிள்களும் இருபது கோபக்குகளுமே மீதமிருப்பதை அவர் கண்டார்.

“நல்லது” என்ற அவர், “இதைக் கொண்டு கடலைக் கடப்பதில் பயனில்லை. நான் வழியில் இரந்து பெறலாம் என்றால் அது போகாமலிருப்பதைவிட மோசமானது. நானில்லாமல் நண்பர் எஃபிம் ஜெருசலத்தை அடைந்துவிடுவார். அவர் என் பெயரில் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பார். நான் இந்த வாழ்க்கையில் என்னுடைய வேண்டுதலை நிறைவேற்ற மாட்டேன் என அஞ்சுகிறேன். பாவிகளை மன்னிக்கும் இரக்கமுள்ள கடவுளுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும்.” என நினைத்தார்.

எழுந்திருந்த எலிஷா தன்னுடைய பையை தோளில் மாட்டிக்கொண்டு திரும்பினார். தன்னை யாரும் கண்டுகொள்ளாமல் இருப்பதற்காக அந்த கிராமத்தைச் சுற்றிக்கொண்டு வேகமாக வீட்டை நோக்கி நடந்தார். வீட்டிலிருந்து கிளம்பும்போது எஃபிமைப் பின்தொடர்வது அவருக்குக் கடினமாக இருந்தது. ஆனால் இப்போது அவர் தனியாக வீட்டை நோக்கிச் செல்கையில் கடவுளின் கருணையால் எந்தவிதமான அயர்ச்சியோ களைப்பையோ அடையவில்லை. நடப்து குழந்தை விளையாட்டாக இருந்தது. அவர் பாட்டுப் பாடிக்கொண்டு ஒரு நாளில் நாற்பது முதல் ஐம்பது மைல் வரை நடந்தார்.

எலிஷா வீட்டை அடைந்தபோது அறுவடை முடிந்திருந்தது. அவரைக் கண்டு மகிழ்ச்சியடைந்த அவரது குடும்பத்தினர் என்ன நடந்தது என்று விசாரித்தனர். ஏன் அவர் பின்னடைந்தார்? ஜெருசலமுக்குச் செல்லாமல்

இங்கு ஏன் திரும்பி வந்தார்? ஆனால் எலிஷா அவர்களுக்கு எதையும் சொல்லவில்லை.

“நான் அங்கு செல்வது கடவுளின் விருப்பம் அல்ல போலிருக்கிறது” என்றார் அவர். “நான் வழியில் எனது பணத்தைத் தொலைத்ததோடு எனது தோழரைப் பிந்திவிட்டேன். கடவுளின் கருணையால் என்னை மன்னியுங்கள்!”

தன்னிடம் எஞ்சியிருந்த பணத்தைத் தனது மனைவியிடம் கொடுத்தார். அதன் பிறகு அவர் வீட்டு விவகாரங்களைக் கேட்டறிந்தார். அனைத்தும் நல்லவிதமாகச் செல்ல எல்லா வேலைகளும் முடிந்துவிட்டிருந்தன. எதுவும் புறக்கணிக்கப்படவில்லை. அனைவரும் நிம்மதியாக இணக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அன்றைய தினமே அவர் திரும்பிய செய்தியை அறிந்த எஃபிம் குடும்பத்தினர் அவரிடம் வந்து விசாரிக்க அவர் அதே பதிலைச் சொன்னார்.

“எஃபிம் வேகமாக நடப்பவர். செயின்ட பீட்டர் நாளுக்கு மூன்று தினம் முன்னர் நாங்கள் பிரிந்துவிட்டோம். நான் அவரை மீண்டும் பிடித்துவிடலாம் என முயன்றபோது இப்படி நடந்துவிட்டது. பணத்தை இழந்த நான் மேற்கொண்டு செல்ல முடியாமல் திரும்பி விட்டேன்.”

ஒரு மனிதன் தான் புறப்பட்ட இலக்கை அடையாமல் தனது பணத்தைப் பறிகொடுத்துவிட்டு இப்படியும் முட்டாள்தனமாகத் திரும்பி வர முடியுமா என்று அனைவரும் ஆச்சர்யப்பட்டார்கள். சில நாட்களுக்கு அதைப் பற்றி வியந்த அவர்கள் பிறகு அதை மறந்துவிட்டார்கள். எலிஷாவும் அதை மறந்துவிட்டார். அவர் மீண்டும் தனது வீட்டில் வேலை செய்ய ஆரம்பித்தார்.

தனது மகனின் உதவியோடு அவர் குளிர் காலத்திற்கு வேண்டிய விறகுகளை வெட்டி வைத்தார். அவரும் வீட்டுப் பெண்களும் சேர்ந்து சோளத்தைப் பிரித்தெடுத்தார்கள். பிறகு அவர் வீட்டின் வெளிப்புறத்தைச் செப்பனிட்டார். தேன்கூட்டிலிருந்து வசந்த காலத்தில் தான் விற்ற பத்து

தேனடைகளை அதிலிருந்து திரண்டு தேனடைகளோடு பக்கத்து வீட்டுக்காரருக்குக் கொடுத்தார். அவருடைய மனைவி தேனீக்கள் எத்தனை தேனடைகளைக் கொடுத்தன என்பதைச் சொல்லவில்லை என்றாலும் அவர் எந்தெந்த தேனீக்கள் எவ்வளவு தேனடைகளைத் தரும் என்பதை நன்கு அறிந்திருந்தார். பத்துக்கு பதிலாக பதினேழு தேனடைகளை அவர் பக்கத்து வீட்டுக்காரருக்குக் கொடுத்தார். குளிர்காலத்தை முன்னிட்டு வேண்டிய அனைத்தையும் செய்து முடித்த எலிஷா தனது மகனை வேலை தேடுவதற்காக அனுப்பி வைத்தார். அவர் காலணிகளின் அடிப்பாகத்தைச் செப்பனிடவும், தேனடைகளை வெட்டவும் செய்தார்.

# 8

எலிஷா பின்தங்கி நோயுற்ற மனிதர்களோடு தங்கிவிட்ட நிலையில் அவருக்காகக் காத்திருந்தார் எஃபிம். சற்று தூரமே சென்றிருந்த அவர் உட்கார்ந்து வெகு நேரமாகக் காத்திருந்தார். இடையிடையே தூங்கி விழுந்த அவர் வெகு நேரமாகக் காத்திருந்த போதும் தனது தோழர் வராததைக் கண்டார். அவர் தனது கண்கள் வலிக்கும் வரை எதிர்பார்த்திருந்தார். சூரியன் ஏற்கனவே மரங்களுக்குப் பின்னால் மறையத் தொடங்கியிருந்தபோதும் எலிஷா தென்படவில்லை.

"ஒருவேளை அவர் என்னைக் கடந்து சென்றிருக்கலாம்" என நினைத்த எஃபிம், "அல்லது யாரேனும் அவருக்கு சவாரி கொடுக்க, நான் தூங்குவதை அறியாமல் அவர் சென்றிருக்கலாம். அவர் என்னைக் காண எப்படி உதவ முடியும்? இந்தப் புல்வெளியில் கண்ணுக்கெட்டிய வரை பார்க்கலாம். நான் மீண்டும் திரும்பிச் செல்வதா? ஒருவேளை அவர் எனக்கு முன்னால் சென்றிருந்தால், இருவரும் ஒருவரை ஒருவர் தவறவிட நிலைமை மேலும் மோசமாகிவிடும். நான் மேற்கொண்டு செல்வதே நல்லது. நிச்சயமாக இரவு நேரத்தில் இருவரும் சந்திக்க நேரலாம்."

ஒரு கிராமத்தை அடைந்த அவர், காவலாளியிடம் முதியவர் ஒருவரின் அடையாளத்தைச் சொல்லி அவர் வந்தால் தானிருக்கும் குடிசைக்கு அழைத்து வரும்படிச் சொன்னார். ஆனால் எலிஷா அன்றிரவு திரும்ப வரவில்லை. மேலும் சென்ற இவர் வழியெங்கும் வழுக்கைத் தலையான ஒரு முதியவரைப் பார்த்தீர்களா என்று விசாரித்துக் கொண்டு சென்றார். ஆனால் அப்படி யாரையும் அவர்கள் பார்க்கவில்லை. வியப்புற்று தனியாகச் சென்ற எஃபிம் சொன்னார்:

"நாங்கள் நிச்சயமாக ஒடிசாவில் அல்லது கப்பல் தளத்தில் சந்திப்போம்" என நினைத்தை அவர் அதைப் பற்றி மேற்கொண்டு சிந்திக்கவில்லை.

வழியில் பாதிரியின் அங்கியோடு, நீண்ட தலை முடியும், பாதிரிகள் அணியும் தலைப்பாகையும் அணிந்த ஒரு யாத்ரீகர் தன்னைக் கடந்து செல்வதைக் கண்டார். மவுண்ட அதோஸ் என்ற அந்த யாத்ரீகர் இரண்டாம் முறையாக ஜெருசலமிற்குச் சென்று கொண்டிருந்தார். அவர்கள் இருவரும் ஒரு நாள் இரவு ஒரே இடத்தில் சந்தித்த பிறகு மேற்கொண்டு இருவரும் சேர்ந்து பயணித்தனர்.

அவர்கள் பாதுகாப்பாக ஒடிசாவை அடைந்து கப்பலுக்காக மூன்று நாட்கள் காத்திருந்தார்கள். பல பகுதியிலிருந்து வந்திருந்த யாத்ரீகள் பலருக்கும் இதே நிலைதான். எஃபிம் மீண்டும் எலிஷாவைப் பற்றி விசாரித்தார் என்றாலும் யாரும் அவரைப் பார்க்கவில்லை.

எஃபிம் ஐந்து ரூபிள்கள் செலவழித்து வெளிநாட்டு பாஸ்போர்ட் வாங்கினார். ஜெருசலத்திலிருந்து மீண்டும் திரும்பி வருவதற்காக நாற்பது ரூபிள்கள் கொடுத்தார். மேலும் பயணத்திற்குத் தேவையான ரொட்டி வாங்கினார்.

ஒரு யாத்ரீகர் கட்டணம் செலுத்தாமல் கப்பலில் இடம் பிடிப்பதைப் பற்றிச் சொல்ல அவர் அதை செவிமடுக்கவில்லை. “இல்லை, நான் கொடுப்பதற்குத் தயாராக வந்திருக்கிறேன் அதனால் கொடுக்கிறேன்” என்றார் அவர்.

கப்பல் தயாரானதும் யாத்ரீகர்கள் கப்பல் தளத்திற்கு வந்தனர். அவர்களில் எஃபிமும் அவருடைய புதிய நண்பரும் இருந்தார்கள். நங்கூரம் எடுக்கப்பட்டு கப்பல் கடலில் பயணித்தது.

பகல் முழுவதும் அவர்கள் சுமுகமாகப் பயணிக்க, இரவில் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. தூக்கி வீசப்பட்ட கப்பலில் தண்ணீர் புகுந்தது. பயணிகள் அனைவரும் அஞ்சி நடுங்க, பெண்கள் பயத்தால் அலறினார்கள். பலவீனமான ஆண்கள் பயந்துபோய் ஒளிந்து கொள்ள இடம் தேடினர். எஃபிம் பயந்துபோனார் என்றாலும் அதை வெளிக்காட்ட வில்லை. அவர் கப்பலில் ஏறியபோது எந்த இடத்தில் நின்றாரோ அதே இடத்திலேயே நின்றார். அவருக்கு பக்கத்தில் டாம்பாஃபிலிருந்து வந்த மனிதர்கள் சிலர் அமைதியாக இரவும் பகலும் தங்கள் சாக்குகளைப்

பிடித்தவர்களாக அமர்ந்திருந்தனர்.

மூன்றாவது நாள் அமைதியாக நகர, ஐந்தாவது நாளில் கப்பல் கான்ஸ்டான்டினோப்பிளில் நங்கூரமிட்டது. சில யாத்ரீகர்கள் புனித சோபியா தேவாலயத்தை பார்வையிட கரைக்குச் சென்றனர். கப்பலிலேயே தங்கியிருந்த எஃபிம் சில வெள்ளை ரொட்டிகளை மட்டுமே வாங்கினார். இருபத்தி நான்கு மணி நேரத்திற்குப் பிறகு கப்பல் மீண்டும் கடலில் பயணித்தது. மீண்டும் ஸ்மிர்னாவில் நின்ற அவர்கள் அடுத்து அலெக்ஸாண்ட்ரியாவில் நின்று கடைசியாக ஜஃபாவுக்கு பாதுகாப்பாக வந்து சேர்ந்தார்கள், அங்கு அனைத்து யாத்ரீகர்களும் இறங்க வேண்டியிருந்தது. அங்கிருந்து இன்னும் ஜெருசலேமுக்கு சாலை வழியாக நாற்பது மைல்களுக்கு மேல் போகவேண்டி இருந்தது.

கப்பலிருந்து இறங்கும் போது அவர்கள் மீண்டும் பயந்து போனார்கள். கப்பல் உயரமாக இருந்ததால் அவர்கள் படகுகளில் இறக்கிவிடப்பட்டார்கள். அது அதிகமாக ஆடியதால் அவர்கள் எளிதாக தண்ணீரில் விழுவதற்கு சாத்தியமிருந்தது. சில மனிதர்கள் தண்ணீரில் நனைந்தார்கள் என்றாலும் இறுதியில் அனைவரும் பத்திரமாகத் தரை இறங்கினார்கள்.

கால்நடையாக நடந்த அவர்கள் மூன்றாவது நாள் ஜெருசலத்தை அடைந்தனர். அவர்கள் நகரத்திற்கு வெளியே இருந்த ருஷ்ய ஓட்டலில் நின்றனர். அங்கே அவர்களின் பாஸ்போர்ட்டுகள் பரிசோதிக்கப் பட்டன. அதன் பிறகு இரவு உணவு உண்ட பின்னர் எஃபிம் தனது சக பயணிகளோடு புனித இடங்களுக்குச் சென்றார். அவர்கள் புனித செபுல்கரில் அனுமதிக்கப்பட வேண்டிய நேரம் அதுவல்ல என்றபோது பேட்ரியார்ச்சேட்டுக்குச் சென்றனர். அனைத்து யாத்ரீகர்களும் அங்கு கூடினர். ஆண்களிடமிருந்து தனியாக பெண்கள் ஒதுக்கப்பட அனைவரையும் வெறுங்காலுடன் ஒரு வட்டத்தில் உட்காரும்படி கூறினர்.

ஒரு துண்டுடன் வந்து துறவி ஒருவர் அவர்களின் பாதங்களைக் கழுவினார். பாதங்களைக் கழுவித் துடைத்துப் பின்னர் முத்தமிட்டார். வட்டத்திலிருந்த ஒவ்வொருவருக்கும் அவர் இதைச் செய்தார்.

அனைவரோடும் சேர்த்து எஃபிமின் பாதங்களும் கழுவி முத்தமிடப்பட்டது. அவர் சன்னதிகளில் மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து ஜபம் செய்தார். இங்கே பேட்ரியார்ச்சேட்டில் உணவும் மதுவும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அடுத்த நாள் காலையில் அவர்கள் தவம் செய்து வாழ்ந்த எகிப்தின் மரியாவின் கோயிலுக்குச் சென்றார்கள். இங்கேயும் அவர்கள் மெழுகுவர்த்திகளை வைத்து ஜெபங்களை வாசித்தார்கள்.

அங்கிருந்து அவர்கள் ஆபிரகாமின் மடத்துக்குச் சென்று, ஆபிரகாம் தன் மகனை கடவுளுக்குப் பலியிட நினைத்த இடத்தைக் கண்டனர். பின்னர் அவர்கள் கிறிஸ்து மாக்தலேனா மரியாவுக்கும், கர்த்தருடைய சகோதரரான யாக்கோபின் தேவாலயத்திற்கும் விஜயம் செய்தனர். இந்த இடங்கள் அனைத்தையும் எஃபாமுக்குக் காட்டிய ஒரு யாத்ரீகர் ஒவ்வொரு இடத்திலும் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று அவரிடம் கூறினார். மதியம் அவர்கள் சத்திரத்திற்குத் திரும்பி இரவு உணவு சாப்பிட்டார்கள். அவர்கள் படுத்து ஓய்வெடுக்கத் தயாரானபோது அந்த யாத்ரீகர் கூக்குரலிட்டு, அவருடைய ஆடைகளைத் தேடத் தொடங்கினார்.

“என்னுடைய பணப்பை திருடப்பட்டுவிட்டது. அதில் இருபத்து மூன்று ரூபிள்கள் இருந்தன” என்ற அவர், “இரண்டு நூறு ரூபாயும் மீதி சில்லறையாகவும் இருந்தன” என்றார்.

அவர் அழுது புலம்பினார் எனினும் அதை யாரும் கண்டுகொள்ளவில்லை என்பதால் அப்படியே படுத்து உறங்கினார்.

# 9

படுத்திருந்த எஃபிம் இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

"இந்த யாத்ரீகரிடமிருந்து யாரும் பணத்தைத் திருடியிருக்க மாட்டார்கள்" என்ற அவர், "அவர் எதையாவது வைத்திருந்தாரா என்பது சந்தேகம் தான். அவர் என்னைக் கொடுக்கச் சொன்னபோதும், என்னிடமிருந்து ஒரு ரூபிள் கடனாகப் பெற்றபோதும் அவர் எங்கேயும் கொடுக்கவில்லை" என நினைத்தார்.

இந்த எண்ணம் விரைவில் அவரது மனதை விட்டு நீங்கவில்லை. எஃபிம் தன்னைக் கடிந்துகொண்டு, "ஒரு மனிதனை எடைபோட எனக்கு என்ன உரிமை இருக்கிறது? அது ஒரு பாவம். இதைப் பற்றி நான் இனி யோசிக்க மாட்டேன்" என்றாலும் அவரது எண்ணங்கள் அலையத் தொடங்கி மீண்டும் யாத்ரீகரிடம் திரும்பியது. "அவர் பணத்தில் எவ்வளவு ஆர்வம் காட்டினார். அவர் தனது பணப்பை திருடப்பட்டதாக அறிவித்தபோது அது எவ்வளவு செயற்கையாக இருந்தது."

"அவரிடம் எந்தப் பணமும் இல்லை, அது ஒரு நாடகம்" என நினைத்தார் எஃபிம்.

மாலையில் எழுந்த அவர்கள் லார்ட்ஸ் செபுல்கர் இருக்கும் பெரிய உயிர்த்தெழுதல் தேவாலயத்திற்கு நள்ளிரவு சென்றார்கள். அந்த யாத்ரீகர் எஃபிமுடன் நெருக்கமாக இருந்து எல்லா இடங்களுக்கும் அவருடன் சென்றார். அவர்கள் தேவாலயத்திற்கு வந்தபோது ஏராளமான யாத்ரீகர்கள் அங்கே இருந்தார்கள். அவர்களில் சிலர் ருஷ்யர்கள் வேறு சிலர் கிரேக்கர்கள், ஆர்மீனியர்கள், துருக்கியர்கள் மற்றும் சிரியர்கள். எஃபிம் கூட்டத்துடன் புனித வாயிலுக்குள் நுழைந்தார். ஒரு துறவி அவர்களைத் துருக்கிய காவலர்களைக் கடந்து இரட்சகரை சிலுவையிலிருந்து இறக்கி அபிஷேகம் செய்த இடத்துக்கும், ஒன்பது பெரிய மெழுகுவர்த்திகள்

எரியும் இடத்துக்கும் அழைத்துச் சென்றார்.

அந்தத் துறவி அனைத்தையும் காட்டி விரிவாக விளக்கம் கொடுத்தார். எஃபிம் தானும் ஒரு மெழுகுவர்த்தி வாங்கிக் கொடுத்தார். பின்னர் துறவி எஃபிமை வலப்புறம் படிகளில் ஏறி கோல்கொத்தா வரை சிலுவை நிறுத்தப்பட்ட இடத்திற்கு அழைத்துச் சென்றார். எஃபிம் அங்கே பிரார்த்தனை செய்தார். பின்னர் அவர் தரைக்கு அடியில் இருந்த பிளவுகளையும், கிறிஸ்துவின் கைகளும் கால்களும் சிலுவையில் அறையப்பட் இடத்தையும், ஆதாமின் கல்லறை, ஆதாமின் எலும்புகள் மீது கிறிஸ்துவின் இரத்தம் சொட்டிய இடம், அவருடைய தலையில் முள் கிரீடம் வைக்கப்பட்டபோது கிறிஸ்து அமர்ந்திருந்த கல் ஆகியவற்றைக் காட்டினார். கிறிஸ்து துன்புறுத்தப்பட்டபோது அவர் பிணைக்கப்பட்ட தூண், கிறிஸ்துவின் கால்கள் இருந்த இரண்டு துளைகளைக் கொண்ட கல்லையும் எஃபிம் கண்டார். அவர் அவர்களுக்கு வேறு ஒன்றைக் காட்டப் போனார் ஆனால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. மக்கள் அனைவரும் லார்ட்ஸ் செபுல்கரின் தேவாலயத்திற்கு விரைந்தனர். அங்கே லத்தீன் பிரார்த்தனை முடிந்து ருஷ்ய பிரார்த்தனை தொடங்கியது. அதன் பிறகு எஃபிம் கூட்டத்தோடு பாறையில் செதுக்கப்பட்ட கல்லறைக்குச் சென்றார்.

எஃபிம் அந்த யாத்ரீகரை விட்டு விலக முயன்றார், அவருக்கு எதிராக அவர் மனதில் இன்னும் சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் யாத்ரீகர் அவரை விட்டு விலகவில்லை. அவர் புனித செபுல்கரில் பிரார்த்தனைக்குச் சென்றார். ஆனால் கூட்டம் அதிகமாக இருந்ததால் மிகவும் தாமதமாகிவிட்டது. மேலும் முன்னாலும் பின்னாலும் செல்ல முடியாதபடி கூட்டம் அலைமோதியது. எஃபிம் ஒவ்வொரு முறை பிரார்த்தனை செய்யும் போதும் அவரது கவனமெல்லாம் அவருடைய பணப்பையின் மீதே இருந்தது. எஃபிமின் மனம் இரண்டும் கெட்டானாகத் தவித்தது. சில சமயங்களில் அந்த யாத்ரீகர் தன்னை ஏமாற்றுவதாக அவர் நினைத்தார். அப்படி நினைத்த பின்னர் மீண்டும் யாத்ரீகர் உண்மையைச் சொல்கிறார் என்று தோன்றியது. உண்மையாகவே அவரது பணப் பை திருடு போயிருந்தால் அதே விஷயம் தனக்கும் ஏற்படக்கூடும் என்று அவர் நினைத்தார்.

# 10

புனித செபுல்கர் இருந்த சிறிய தேவாலயத்தில், மேலே முப்பத்தாறு விளக்குகள் எரிவதை எஃபிம் வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றார். அவர் மக்களின் தலைக்கு மேலே பார்த்தபோது, அவரை ஆச்சரியப்படுத்தும் ஒன்றைக் கண்டார். விளக்குகளுக்குக் கிழே புனித நெருப்பு எரிவதற்கு முன்புறம் நின்றிருந்த கூட்டத்தில் சாம்பல் நிற அங்கியணிந்த ஒரு வயதான மனிதனை எஃபிம் கண்டார். அவருடைய பளபளப்பான வழுக்கைத் தலை எலிஷாவைப் போலவே இருந்தது.

“அவரைப் போலவே தெரிகிறது” என்ற எஃபிம், “ஆனால் அது எலிஷாவாக இருக்க முடியாது. அவர் எனக்கு முன்னால் செல்ல முடியாது. எங்களுக்கு முந்தைய கப்பல் ஒரு வாரத்திற்கு முன்னர்தான் புறப்பட்டது. அவர் அதைப் பிடித்திருக்க முடியாது. அவர் எங்களுடைய கப்பலிலும் இல்லை” என நினைத்தார்.

வயதானவர் ஜெபிக்கத் தொடங்கியதும், கடவுளுக்கு முன்னே மூன்று முறை வணங்கிய போது எஃபிம் அது அவராக இருக்கும் என நினைக்கவில்லை. ஆனால் அவர் தலையை வலது பக்கம் திருப்பியபோது எஃபிம் அவரை அடையாளம் கண்டுகொண்டார். கருமையான சுருண்ட தாடியுடன், கன்னங்களில் சாம்பல் நிறமாகப் படர்ந்த தாடியோடு, புருவம், கண்கள் மூக்கும், முகத்தின் பாவங்களும் எலிஷா தான். ஆம், அது அவர்தான்!

தனது தோழரைக் கண்டு கொண்ட எஃபிம் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். அவர் தனக்கு முன்னால் எப்படி வந்தார் என்று அவர் வியந்தார்.

“நல்லது, எலிஷா!” என அவர் நினைத்தார். “அவர் எப்படி முன்னதாகவே வந்துவிட்டார். அவருக்கு யாரேனும் வழி காட்டியிருக்க வேண்டும். நாங்கள் வெளியே வரும்போது நான் அவரைப் பிடிப்பேன். இந்த தொப்பி




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

அணிந்த மனிதரை விட்டுவிட்டு எலிஷாவோடு இணைய வேண்டும். ஒரு வேளை அவர் எப்படி முன்னால் செல்வது என்பதை எனக்கும் காண்பிக்கக் கூடும்."

எலிஷாவைத் தன் பார்வையிலிருந்து தவறவிடாமல் கண்காணித்துக் கொண்டேயிருந்தார் எஃபிம். ஆனால் பிரார்த்தனை முடிந்த பிறகு கூட்டம் திணறத் தொடங்கியது. கல்லறையை முத்தமிட முன்னேறிய கூட்டம் எஃபிமை ஒதுக்கித் தள்ளியது. தனது பணப்பை திருடு போய்விடக்கூடாது என்ற பயம் அவரை மீண்டும் பற்றியது. அதைத் தனது கையால் அழுத்திக்கொண்டு வெளியேறுவதில் மட்டுமே கவனம் செலுத்திய அவர் கூட்டத்தோடு கூட்டமாக வெளியேறினார். அவர் திறந்தவெளியை அடைந்ததும், எலிஷாவை வெளியிலும் ஆலயத்திலும் தேடியவராக நீண்ட நேரமாக நின்றார்.

திருச்சபையின் கலங்களில் அவர் எல்லா வகையான மக்களும் சாப்பிடுவதையும், மது அருந்துவதையும், தூங்குவதையும் கண்டார். ஆனால் எலிஷா எங்கும் காணப்படவில்லை. எனவே எஃபிம் தனது தோழரைக் கண்டுபிடிக்காமல் சத்திரத்திற்குத் திரும்பினார். அன்று மாலை தொப்பி அணிந்திருந்த அந்த யாத்ரீகர் திரும்பவில்லை. அவர் தான் கொடுக்கவேண்டிய ரூபிளைத் திருப்பிக் கொடுக்காமலே போய்விட, எஃபிம் தனியாக இருந்தார்.

அடுத்த நாள் எஃபிம் மீண்டும் புனித செபுல்கருக்கு டாம்பேஃயிலிருந்து வந்திருந்த கப்பலில் சந்தித்த ஒரு வயதான மனிதருடன் சென்றார். அவர் முன்னால் செல்ல முயன்றார் என்றாலும் மீண்டும் பின்னால் தள்ளப்பட்டார். எனவே அவர் ஒரு தூணின் அருகே நின்று ஜெபம் செய்தார். அவர் முன்னால் பார்த்தபோது அங்கே விளக்குகளின் அடியில், கர்த்தருடைய கருவறைக்கு மிக அருகில் எலிஷா ஒரு பாதிரியாரைப் போல கைகளை விரித்து நின்றிருக்க அவருடைய வழுக்கைத் தலை பிரகாசித்தது.

"நல்லது, இப்போது நான் அவரை விட்டுவிடக் கூடாது!" என நினைத்தார் எஃபிம்.

அவர் தள்ளிக்கொண்டு முன்னால் சென்றபோது அங்கே எலிஷா இல்லை, அவர் போய்விட்டார்.

மீண்டும் மூன்றாவது நாள் கருவறைக்கு அருகில் புனித இடத்தில், எலிஷா எல்லா மனிதர்களைப் போல விரித்த கையோடு நின்றிருக்க, அவர் கண்கள் மேலே ஏதோ ஒன்றைப் பார்ப்பது போல மேல்நோக்கி வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தன. அவரது வழுக்கைத் தலை முழுவதுமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

“நல்லது, இந்த முறை அவர் என்னிடமிருந்து தப்ப முடியாது! நான் சென்று கதவுக்கு அருகில் நிற்கிறேன். அப்போது நாங்கள் ஒருவரை ஒருவர் தவறவிட முடியாது” என நினைத்தார் எஃபிம்.

எஃபின் கதவுக்கருகில் மதியம் வரையிலும் நின்றார். எல்லோரும் வெளியே சென்றார்கள் ஆனால் எஃபிம் வரவேயில்லை.

ஆறு மாதங்கள் ஜெருசலத்தில் இருந்த எஃபிம் பெத்லஹேம் முதல் பெத்தானி வரையும் பிறகு ஜோர்டான் வரை அனைத்து இடங்களுக்கும் சென்றார். அவர் புனித செபல்கரில் தன்னோடு சேர்த்துப் புதைக்க ஒரு புதிய சட்டை வாங்கியதோடு ஜோர்டானிலிருந்து ஒரு பாட்டில் தண்ணீரையும், புனித பூமியின் மண்ணையும் எடுத்துக்கொண்டார். அவர் எட்டு இடங்களில் பிரார்த்தனை செய்ய வேண்டிய பெயர்களை பொறித்தார். வீட்டிற்குத் திரும்பிச் செல்வதற்குப் போதுமான பணத்தைத் தவிர அவர் பிற அனைத்தையும் செலவிட்டார். பின்னர் அவர் வீட்டுக்குப் பயணப்பட்டார். ஜாஃபாவுக்கு நடந்து சென்ற அவர் அங்கிருந்து ஒடிசாவுக்குச் சென்று பிறகு அங்கிருந்து கால்நடையாக வீட்டிற்கு நடந்து சென்றார்.

# 11

எஃபிம் தான் வந்த அதே சாலையில் திரும்பிப் பயணம் செய்தார். அவர் வீட்டை நெருங்கியபோது, தான் இல்லாத நேரத்தில் விவகாரங்கள் எவ்வாறு நடந்தன என்பதைக் குறித்த அவரது முந்தைய கவலை மீண்டும் திரும்பியது. 'ஒரு வருடத்தில் அதிக நீர் பாய்கிறது' என்று பழமொழி கூறுகிறது. ஒரு வீட்டைக் கட்டுவதற்கு வாழ்நாள் தேவை என்றாலும் அதை அழிக்க நீண்ட காலம் தேவை இல்லை என்று அவர் நினைத்தார். தான் இல்லாமல் தனது மகன் எவ்வாறு நிர்வாகம் செய்தான், வசந்த காலம் எவ்வாறு கழிந்தது, குளிர்காலத்தில் கால்நடைகள் என்ன செய்தன, வீடு நன்றாகக் கட்டி முடிக்கப்பட்டதா என்று பலவற்றை அவர் யோசித்தார்.

முன்னர் கோடைக்காலத்திற்கு முன்னர் எலிஷாவைப் பிரிந்த மாவட்டத்திற்கு எஃபிம் வந்தபோது, அங்கு வசித்த மக்கள் முன்பு இருந்ததைப் போல இல்லாமல் முற்றிலுமாக மாறியிருப்பதைக் கண்டு அவரால் நம்பவே முடியவில்லை. ஒரு வருடத்திற்கு முன்பு பசியால் வாடிய அவர்கள் இப்போது சௌகரியமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அறுவடை நன்றாக இருந்ததால் மீண்டு வந்த அவர்கள் தங்கள் முந்தைய துயரங்களை மறந்துவிட்டார்கள்.

அன்று மாலை எலிஷா எந்த இடத்தில் பிரிந்தாரோ அந்த இடத்திற்கு வந்த எஃபிம் கிராமத்தில் நுழைகையில் ஒரு சிறுமி வெண்ணிற உடையில் குடிசையிலிருந்து வெளியே ஓடி வந்தாள்.

“அப்பா, அப்பா, எங்கள் வீட்டிற்கு வாருங்கள்!”

எஃபிம் கடந்து செல்ல முற்பட்டபோது அந்தச் சிறுமி அவரைப் போக விடவில்லை. அவரது மேலங்கியைப் பிடித்த அவள் சிரித்தபடி அவரைக் குடிசையை நோக்கி இழுத்தாள். ஒரு சிறுவனுடன் தாழ்வாரத்திற்கு வந்த

பெண் ஒருத்தி அவரைக் கூப்பிட்டாள்.

“வாருங்கள் தாத்தா” என்றாள் அவள். “இரவு உணவைச் சாப்பிட்டுவிட்டு எங்களோடு இரவைக் கழியுங்கள்.”

எஃபிம் உள்ளே சென்றார்.

“நான் எலிஷாவைப் பற்றிக் கேட்கலாம்” என அவர் நினைத்தார். “அவர் தண்ணீர் குடிக்கச் சென்ற குடிசை இதுவாகத்தான் இருக்கும்.”

அவர் சுமந்திருந்த பையை இறக்க அந்தப் பெண் உதவிசெய்து, அவர் தனது முகத்தைக் கழுவிக்கொள்ளத் தண்ணீர் கொடுத்தாள். அவரை மேசையில் அமரவைத்த அவள் அவருக்குப் பால், கேக், கஞ்சி முதலியவற்றை அவர் முன்னே வைத்தாள்.

“யாத்ரீகர்களை வரவேற்க எங்களுக்கு நல்ல காரணம் இருக்கிறது,' என்றாள் அவள். “ஒரு யாத்ரீகர் தான் வாழ்க்கை என்றால் என்ன என்பதை எங்களுக்குக் காட்டினார். நாங்கள் கடவுளை மறந்து வாழ்ந்து கொண்டிருந்தோம். கடவுள் எங்களைக் கிட்டத்தட்ட மரணம் வரை அழைத்துச் சென்றார். கடந்த கோடையில் நாங்கள் அத்தனை அவதியுற்றோம். நாங்கள் அனைவரும் சாப்பிட ஒன்றும் இல்லாமல் நோய்வாய்ப்பட்டு உதவியற்ற நிலையில் கிடந்தோம். நாங்கள் இறந்திருக்க வேண்டும், ஆனால் கடவுள் எங்களுக்கு உதவ உங்களைப் போன்ற ஒரு முதியவரை அனுப்பினார். அவர் ஒரு நாள் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்பதற்காக இங்கே வந்தார். நாங்கள் இருந்த நிலையைக் கண்ட அவர் எங்கள் மீது இரக்கப்பட்டு எங்களுடனே தங்கினார். அவர் எங்களுக்கு உணவையும் தண்ணீரையும் கொடுத்து எங்களை மீண்டும் எங்கள் காலில் நிற்க வைத்தார்; அவர் எங்கள் நிலத்தை மீட்டு, ஒரு வண்டியையும் குதிரையையும் வாங்கி எங்களுக்குக் கொடுத்தார்.”

அப்போது குடிசையில் நுழைந்த கிழவி குறுக்கிட்டுச் சொன்னாள்:

“அது ஒரு மனிதனா அல்லது கடவுளிடமிருந்து வந்த ஒரு தேவதையா என்பது எங்களுக்குத் தெரியாது. எங்கள் அனைவரையும் நேசித்து எங்கள் மீது இரக்கம் கொண்ட அவர், அவருடைய பெயரைச் சொல்லாமலே

போய்விட்டார். இதனால் யாருக்கு நாங்கள் பிரார்த்தனை செய்வது என்று அறியாமல் போனோம். இப்போது அவை அனைத்தையும் நான் என் முன்னால் பார்க்க முடிகிறது! வழுக்கைத் தலை முதியவர் இங்கே வருகையில் நான் மரணத்திற்காகக் காத்திருந்தேன். அவர் வேறு எதற்காகவும் வரவில்லை, குடிப்பதற்காகத் தண்ணீர் கேட்டு வந்தார் அவ்வளவுதான்! பாவியாகிய நான் நினைத்துக் கொண்டேன், 'அவர் எதற்காக இங்கு வருகிறார்?' அவர் என்ன செய்தார் என்று சற்றே யோசியுங்கள்! அவர் எங்களைப் பார்த்தவுடனே தனது பையைக் கீழே வைத்துவிட்டு, இந்த இடத்திலேயே அவர் எங்களோடு ஐக்கியமாகி விட்டார்."

இந்த இடத்தில் சிறுமி சொன்னாள்.

"இல்லை, பாட்டி" என்ற அவள், "அவர் தனது பையை இந்தக் குடிசையின் நடுவில்தான் வைத்தார் அதன் பிறகே அவர் அதை மேசையின் மீது வைத்தார்" என்றாள்.

அவர்கள் அவர் சொன்னதையும் செய்ததையும், அவர் உட்கார்ந்து தூங்கியதையும், அவர்கள் ஒவ்வொருவரிடமும் அவர் சொன்னதையும் நினைவு படுத்தித் தங்களுக்குள் விவாதம் செய்யத் தொடங்கினர்.

அன்று இரவு குதிரையில் தனது குடிசைக்குத் திரும்பிய விவசாயி எலிஷாவைப் பற்றியும் அவர் அவர்களோடு வாழ்ந்ததையும் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

"அவர் வரவில்லை என்றால் நாங்கள் எங்கள் பாவங்களால் இறந்திருப்போம். விரக்தியில் இறந்து கொண்டிருந்த நாங்கள், கடவுளையும் மனிதர்களையும் நிந்தித்துக் கொண்டிருந்தோம். ஆனால் அவர் எங்களை மீண்டும் எங்கள் காலில் நிற்க வைத்தார். அவர் மூலமாக நாங்கள் கடவுளை அறிந்து கொள்ளவும், மனிதர்களில் நல்லவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் நம்பினோம். கர்த்தர் அவரை ஆசீர்வதிப்பாராக! விலங்குகளைப் போல வாழ்ந்த எங்களை அவர் மனிதர்களாக மாற்றினார்."

எஃபிமுக்கு உணவும் தண்ணீரும் கொடுத்த பிறகு அவர்கள் அவர் தூங்குவதற்கான இடத்தைக் காட்டிவிட்டு அவர்களும் படுத்து உறங்கினார்கள்.

படுத்தபோதும் எஃபிமுக்கு உறக்கம் வரவில்லை. அவருடைய மனத்திலிருந்து அவரால் எலிஷாவை விலக்க முடியவில்லை. தான் அவரை ஜெருசலத்தில் மூன்று முறை பார்த்ததை நினைத்துப் பார்த்தார்.

“இப்படித்தான் அவர் எனக்கு முன்னால் வந்து விட்டார்” என நினைத்தார் எஃபிம். “கடவுள் எனது யாத்திரையை ஏற்கலாம் அல்லது ஏற்காமலிருக்கலாம் ஆனால் அவர் நிச்சயமாக அவரது யாத்திரையை ஏற்றுக்கொண்டு விட்டார்!”

அடுத்த நாள் அவர்களிடமிருந்து எஃபிம் விடைபெற்றபோது, அவர்கள் பணிக்குச் செல்லும் முன்னதாக, அவரது பையில் உணவுப் பொருட்களை வைத்து அனுப்ப, அவர் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

# 12

ஒரு மாலையில் எஃபிம் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது மீண்டும் வசந்த காலம் ஆரம்பித்திருந்தது. அவரது மகன் வீட்டில் இல்லை, ஆனால் வெளியே சென்றிருந்த அவன் திரும்பி வந்தபோது அவன் குடித்திருந்தான். எஃபிம் அவனிடம் கேள்வி கேட்கத் தொடங்கினார். தந்தை இல்லாத நேரத்தில் அந்த இளைஞன் நிதானமாக இல்லை என்பது தெரிந்தது. பணம் அனைத்தும் தவறாகச் செலவிடப்பட்டு, அனைத்து வேலைகளும் கைவிடப்பட்டிருந்தன. தந்தை மகனைத் திட்டத் தொடங்க, மகன் முரட்டுத்தனமாக பதில் சொன்னான்.

“நீங்கள் ஏன் இங்கேயிருந்து அனைத்தையும் கவனிக்கவில்லை?” என்றான் அவன். “பணத்தை எடுத்துக்கொண்டு சென்ற நீங்கள் இப்போது என்னிடம் கேட்கிறீர்கள்!”

சினத்தின் வசப்பட்ட கிழவர் மகனை ஓங்கி அடித்தார்.

காலையில் கிராமத்து மூத்தவரிடம் சென்று தனது மகனின் நடத்தையைப் பற்றிப் புகார் செய்யச் சென்றார் எஃபிம். அவர் எலிஷாவின் வீட்டைத் தாண்டிச் செல்கையில் வெளியே நின்றிருந்த அவரது நண்பரின் மனைவி அவரை வரவேற்றாள்.

“நண்பரே எப்படி இருக்கிறீர்கள்? ஜெருசலத்திற்கு பாதுகாப்பாகச் சென்றீர்களா?”

எஃபிம் நின்றார்.

“ஆமாம், நன்றி கடவுளே” என்றார் அவர். “நான் அங்கே சென்றேன். நான் உங்கள் முதியவரைத் தவற விட்டு விட்டேன். ஆனால் அவர் நலமாக வீடு திரும்பினார் எனக் கேள்விப் பட்டேன்.”

பேசுவதை விரும்பிய அந்த முதிய பெண்மணி சொன்னார்:

“ஆமாம், அவர் திரும்பி வந்துவிட்டார்” என்றாள். “அவர் முன்னதாகவே திரும்பி விட்டார். எனது அனுமானத்தின்படி அவர் சீக்கிரமே திரும்பி விட்டார். கர்த்தர் அவரை எங்களிடம் திருப்பி அனுப்பியதில் நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம்! அவர் இல்லாமல் நாங்கள் உற்சாகமற்று இருந்தோம். அவரிடமிருந்து இனிமேல் அதிக வேலையை எதிர்பார்க்க முடியாது, வேலை செய்த அவரது காலம் கடந்துவிட்டது. ஆனால் இன்னும் அவர் வீட்டுத் தலைவராக இருக்கிறார். அவர் வீட்டில் இருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இதனால் எங்கள் பையன் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தான்! அவன் சொல்கிறான், ‘அப்பா வெளியில் சென்றிருக்கும்போது சூரிய ஒளி இல்லாமல் இருப்பது போலுள்ளது.’ நண்பரே! அவர் இல்லாமல் எங்களுக்கு உற்சாகமில்லை. அன்பு நண்பரே! நாங்கள் அவரை நேசிக்கிறோம், அவரை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்.”

“இப்போது அவர் வீட்டிலிருக்கிறாரா?”

“இருக்கிறார் நண்பரே. அவர் அவருடைய தேனீக்களோடு இருக்கிறார். அவர் தேனடைகளைச் சேகரித்துக்கொண்டிருக்கிறார். இந்த வருடம் அவைகள் நன்றாகத் திரண்டுள்ளன என்கிறார் அவர். தேனீக்களுக்கு இத்தகையை சக்தியைக் கடவுள் கொடுத்துள்ளார். ‘கடவுள் நம் பாவங்களுக்கு ஏற்ப நமக்கு நன்மை செய்வதில்லை’ என்பார் அவர். வாருங்கள் நண்பரே, அவர் உங்களை மீண்டும் காண்பதில் பெருமகிழ்ச்சி கொள்வார்.”

எலிஷாவைக் காண எஃபிம் நடைபாதையில் நடந்து, தேனீ பண்ணை வழியாகச் சென்றார். எலிஷா தனது சாம்பல் நிற கோட்டில், முகத்தை மறைக்கும் வலையோ, கையுறைகளோ இல்லாமல், பிர்ச் மரங்களுக்குக் கீழே நின்று, மேல்நோக்கிப் பார்த்தவராகக் கைகளை நீட்டியவாறு, தனது வழுக்கைத் தலை பளபளக்க, எஃபிம் ஜெருசலேமில் உள்ள புனித செபல்கரில் அவரைப் பார்த்தது போலக் காட்சி தந்தார். புனித ஸ்தலத்தில் நெருப்புச் சுடர்கள் செய்ததைப் போல சூரிய ஒளியானது பிர்ச் மரங்கள் வழியாக பிரகாசித்து, தங்கத் தேனீக்களை அவரது தலையைச் சுற்றிலும்

ஒளிவட்டம் போலப் பறக்கவிட்டன.

எஃபிம் நின்றார். அந்தப் பெண்மணி அவரது கணவரை அழைத்தாள்.

“இங்கே உங்கள் நண்பர் வந்துள்ளார்” என்று அவள் கத்தினாள்.

மகிழ்ச்சியோடு சுற்றிலும் பார்த்த எலிஷா தனது தாடியிலிருந்த தேனீக்களை மெதுவாக எடுத்துவிட்டு எஃபிமை நோக்கிச் சென்றார்.

“நல்ல நாள், நண்பரே நல்ல நாள். நீங்கள் அங்கே நலமாகச் சென்றீர்களா?”

“என்னுடைய கால்கள் அங்கே நடந்தன. நான் தங்களுக்காக ஜோர்டான் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவந்திருக்கிறேன். நீங்கள் அதற்காக என் வீட்டிற்கு வரவேண்டும். ஆனால் கடவுள் எனது முயற்சியை ஏற்றுக்கொண்டாரா…”

“நல்லது கடவுளுக்கு நன்றி! கிருஸ்து உங்களை ஆசிர்வதிப்பார்!” என்றார் எலிஷா.

சற்றே நேரத்திற்கு அமைதியாக இருந்த எஃபிம் பிறகு சொன்னார்:

“என்னுடைய கால்கள் அங்கிருந்தன ஆனால் என்னுடைய ஆன்மா உண்மையில்…”

“அது கடவுளின் வேலை. நண்பரே கடவுளின் வேலை” எனக் குறுக்கிட்டார் எலிஷா.

“நான் திரும்பி வரும்போது நீங்கள் எந்த இடத்தில் பின்தங்கினீர்களோ அந்தக் குடிசை அருகே…”

எச்சரிக்கை அடைந்த எலிஷா வேகமாகச் சொன்னார்:

“கடவுளின் வேலை, நண்பரே கடவுளின் வேலை! இங்கே வாருங்கள் நான் எங்கள் தேனைத் தருகிறேன்” என்று பேச்சை மாற்றிய எலிஷா வீட்டு விவகாரங்கள் குறித்துப் பேசினார்.

பெருமூச்சு விட்ட எஃபிம், குடிசையில் இருந்த மக்களைப் பற்றி எலிஷாவிடம் பேசவில்லை. ஜெருசலேமில் அவரை எப்படிப் பார்த்தார்

என்பதையும் பேசவில்லை. ஆனால் ஒருவர் கடவுள் மீது வைக்கும் வேண்டுதலையும், தனது சொந்த வேண்டுதலையும் நிறைவேற்ற சிறந்த வழி, ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் காலத்தில் தனது அன்பை பிறறிடம் வெளிப்படுத்துவதும் அவர்களுக்கு நல்லது செய்வதுமேயாகும் என்பதை அவர் நன்றாகப் புரிந்துகொண்டார்.